இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in   murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 139 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 13 – சனிக்கிழமை 28 டிசம்பர் 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 139: Thiruvalluvar Year - 2055 - Margazhi 13 - Saturday 28 December 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## நாட்டின் வரலாற்றில் அழியாத முத்திரை பதித்த

# முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மறைவு!

## குடியரசுத் தலைவர் – பிரதமர் – கட்சித் தலைவர்கள் இரங்கல்!

**சென்னை, டிச.28–**

**“முன்னாள் பிரதமரும், பொருளாதார அறிஞருமான மன்மோகன் சிங் அவர்கள், நேற்று முன்தினம் இரவு (26.12.2024) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவரது மறைவிற்கு குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் கட்சித் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.**

**அவரது மறைவிற்கு 7 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது. ஒருவாரத்திற்கு அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.**

முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் மீது மிகவும் பற்றும் பாசமும் கொண்டவர் மன்மோகன் சிங் அவர்கள். அவரது தலைமையிலான 10 ஆண்டு கால ஆட்சியில் தமிழகத்தில் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் கோரிக்கை வைத்ததும் முன்னின்று அதனை நிறைவேற்றிக் கொடுத்த பெருமை மன்மோகன் சிங் அவர்களையே சாரும்.

**தமிழ் மொழிக்கு செம்மொழி அங்கீகாரம்!**

உலகப் பொது மொழியாம் தமிழ் மொழி மிகவும் பழமையான மொழி மட்டுமல்ல; நாளுக்கு நாள் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி.

தமிழ் மொழிக்கு “செம்மொழி” அங்கீகாரம் பல நூறு ஆண்டு காலமாக கிடைக்காமல் இருந்தது. 2004–ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி அமைந்ததும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை, அப்போதைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் பரிந்துரையின்படி ஏற்று அப்போது பிரதமராக இருந்த மன்மோகன் சிங் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. இன்று தமிழ் மொழிக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்தப் பெருமை மன்மோகன் சிங் அவர்களையே சாரும். தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு உயர்மட்டப் பாலங்கள் நிறைந்து காணப்படுகின்றது. குறிப்பாக கத்திப்பாரா பாலத்தை யாராலும் மறக்க முடியாது. அந்தப் பாலங்கள் கட்ட தமிழ்நாட்டின் கோரிக்கைக்கு ஒப்புதல் வழங்கினார்.



**சேது சமுத்திரத் திட்டம்!**

இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாக கருதப்பட்ட - நீண்ட காலத் திட்டம் சேது சமுத்திரத் திட்டமாகும். அத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து அதனை தொடங்கிவைத்த பெருமையும் மன்மோகன் சிங் அவர்களையே சார்ந்ததாகும்.

**மதுரவாயல் உயர் மட்டப் பாலம்!**

மதுரவாயலில் இருந்து துறைமுகம் வரையில் உயர்மட்டப் பாலம் அமைக்க ஒப்புதல் அளித்து அதனை முத்தமிழறிஞர் கலைஞர் முன்னிலையில் தொடங்கி வைத்தார். கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட புதிய தலைமைச் செயலகத்தையும் மன்மோகன் சிங் அவர்கள் திறந்து வைத்தார்.

**மெட்ரோ ரயில் திட்டம்!**

இன்றைக்கு சென்னை மாநகரம் உலக நகரங்களுக்கு நிகராக திகழ்கின்றது என்றால் முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய திட்டங்களால் தான். இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக அமைந்தது சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை குறிப்பிடலாம். இத்திட்டமும் மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக இருந்த போது ஒப்புதல் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படி தொழிற்சாலைகள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், பாலங்கள், உயர் மட்ட மேம்பாலங்கள், தேசிய நெடுஞ்சாலைகள் என்று தமிழ்நாட்டின் வளர்ச்சி இன்றைக்கு பெருகி இருக்கிறது என்றால் இவற்றிற்கு அப்போது பிரதமராக இருந்த மன்மோகன் சிங் அவர்களின் பங்களிப்பும் முக்கிய அங்கமாக இருந்தது என்றே சொல்லலாம்.

அது மட்டுமல்லாமல் இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய காரண கர்த்தாவாக திகழ்ந்தவர் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள்.

**பிரதமர்**

மன்மோகன் சிங் 2004 முதல் 2014 வரை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (யுபிஏ) அரசாங்கத்தின் பிரதமராக இருந்தார். 13வது இந்தியப் பிரதமராகப் பதவி வகித்த அவர், தொடர்ந்து இரண்டு முறை பிரதமராக பணியாற்றினார்.

மன்மோகன் சிங் அவர்கள், பிரதமராவதற்கு முன்பு 1991–ஆம் ஆண்டு பி.வி. நரசிம்மராவ் அரசில் நிதி அமைச்சராக இருந்தார். அப்போது அவரது செயல்பாடுகள் காரணமாக இந்தியாவின் பொருளாதாரத்தின் சிற்பிகளில் ஒருவராகப் போற்றப்பட்டார்.

**வாழ்க்கைக் குறிப்பு:**

1932ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் தேதி, பிரிட்டிஷ் இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள கா என்ற கிராமத்தில் பிறந்தார். (அது இப்போது பாகிஸ்தானில் உள்ளது.) 1947இல் இந்தியப் பிரிவினைக்குப் பிறகு, அவரது குடும்பம் இந்தியாவிற்குக் குடிபெயர்ந்தது. இளமைப் பருவத்திலேயே மன்மோகன் சிங் கல்வியில் சிறந்து விளங்கினார். சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதல் வகுப்பு பட்டம் பெற்றார்.



**முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!**

பின்னர் அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் படிப்பைத் தொடர்ந்தார். 1957இல் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றார். 1962 இல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் DPhil பட்டம் பெற்றார். ஏப்ரல் 2024இல் தான் மாநிலங்களவை உறுப்பினர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றார்.

அரசியலுக்கு வருவதற்கு முன்பாக, பஞ்சாப் பல்கலைக்கழகம் மற்றும் டெல்லி ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஆகியவற்றில் பேராசிரியராக பணியாற்றினார். 1972 முதல் 1976 வரை தலைமைப் பொருளாதார ஆலோசகர் உள்பட பல முக்கிய பதவிகளை வகித்தார்.

1982 முதல் 1985 வரை இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்தார். அப்போது இந்தியப் பொருளாதாரத்தை வலிமைப்படுத்தல் மற்றும் நிதி ஒழுங்குமுறையில் கவனம் செலுத்தினார். 1985 முதல் 1987 வரை திட்டக் கமிஷனின் துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.

**குடியரசுத் தலைவர், பிரதமர் இரங்கல்!**

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் மறைவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, திருமதி சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்பட தேசிய, மாநில கட்சித் தலைவர்கள், மாநில முன்னாள், இந்நாள் முதல்வர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். மேலும் பல்வேறு நாடுகளின் முக்கிய பிரமுகர்கள் இரங்கல் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

**7 நாள் துக்கம்**

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களின் மறைவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்திய அரசு 7 நாள் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் 7 நாட்கள் ரத்து செய்யப்படுவதாகவும் இந்திய அரசு அறிவித்துள்ளது.

---

முன்னாள் பிரதமர்

## மன்மோகன் சிங் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி!

புதுடெல்லி, டிச. 28–

முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் மறைவெய்தியதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று புதுடெல்லி விரைந்து சென்று, மறைந்த மன்மோகன் சிங் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

---

## தமிழ்நாட்டின் கனவுகளை மதிப்பவராகத் திகழ்ந்தவர்!

# இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை முன்னோக்கி வழிநடத்தியவர்!

## மன்மோகன் சிங் மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச.28–**

**“இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை முன்னோக்கி வழி நடத்தியவர் மன்மோகன் சிங் அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

**முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:–**

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன். பெரும் தலைவரான அவரது அறிவாற்றலும் தலைமைத்துவமும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை முன்னோக்கி வழிநடத்தியது. பிரதமராக அவரது பதவிக்காலம் நிலையான வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்திய சீர்திருத்தங்கள் ஆகியவற்றைக் கொண்டதாகத் திகழ்ந்தது.

தலைவர் கலைஞர் அவர்கள் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுடன் இணைந்து செயல்பட்டது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றியது. அவர்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த மதிப்பும், அவர்களது கூட்டணியும் மிகப் பெரும் சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வந்து, அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை வலுப்படுத்தின. தமிழ்நாட்டின் கனவுகளை மதிப்பவராக டாக்டர் மன்மோகன் சிங் இருந்தார். தென்னக மக்களின் குரல்கள் தேசிய அளவிலான திட்டங்களில், கொள்கைகளில் எதிரொலிப்பதை அவர் உறுதிசெய்தார்.

**ஆழ்ந்த சிந்தனை கொண்ட தலைமைப் பண்பாளர்!**

நெருக்கடியான காலங்களிலும் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களும் உறுதியாக ஒன்றிணைந்து நின்று, நம்பிக்கை மற்றும் மாநில அடையாளங்களுக்கான மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட கூட்டணி அரசின் வலிமையை வெளிப்படுத்தினர். அவரது அமைதியான, ஆழ்ந்த சிந்தனை கொண்ட தலைமைப்பண்பானது பொதுவாழ்வில் காண்பதற்கு மிகவும் அரிதான பண்பாகும். அவர் குறைவாகப் பேசினார், ஆனால் மிகுதியாகச் சாதித்தார். அவர் வாய்ச்சொல் வீரராக அல்லாமல் தனது தீர்க்கமான செயல்களினால் பேசினார்.

பிரதமர் என்பதையும் தாண்டி, தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு நண்பராக அவர் விளங்கினார்.

**தி.மு.கழகத்தின் சார்பில் இரங்கல்!**

நமது தேவைகளைப் புரிந்து கொண்டு, அவற்றைத் தீர்த்து வைத்த அவரது செயல்பாடு இந்தியாவின் வளர்ச்சி வரலாற்றில் தமிழ்நாடு வலிமையான பங்காற்றுவதற்குத் துணை புரிந்தது. பரந்துபட்ட அறிவைக் கொண்டிருந்தாலும், உயர்ந்த பதவியில் இருந்தாலும் மிகவும் அடக்கத்துடன் அவர் இருந்தார். இதன்வழியாக அவருடன் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றவர்களிடம் ஆழ்ந்த தாக்கத்தை அவர் விட்டுச் சென்றுள்ளார்.



தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் மன்மோகன் சிங் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த அனைத்துத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் பேரறிவும், பணிவும், தொண்டும் எதிர்காலத் தலைமுறைகளுக்கு ஊக்கமூட்டித் தொடர்ந்து வழிகாட்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.